கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. - பீ.கியு 118 (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படும்) இல் திறந்து பராமரிக்கப்பட்டு வருகின்ற அனைத்து நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்குகளும் கட்டுப்படுத்தப்படும்:

கணக்கைத் திறத்தல்

1. ஒரு கணக்கைத் திறக்கும் போது, நேஷன்ஸ் வங்கியின் கணக்குகள் திறக்கும் விண்ணப்பப் படிவங்களை முறையாக நிரப்பிய பின்னர், வங்கியால் பின்பற்றப்படும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் செயல்முறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அடையாளம் காணும் செயற்பாட்டின் போது நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்குகளுக்கான தகைமையைப் பூர்த்தி செய்கின்ற, பதினெட்டு (18) வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் (இதன் பின்னர் "வாடிக்கையாளர்" என்று அழைக்கப்படுகின்ற) நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைத் ("NPIP கணக்கு") திறக்கலாம்.

2. அனைத்து நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கிற்கும் ("NPIP கணக்கு") ஓர் கணக்கிலக்கம் வழங்கப்படும் என்பதுடன், வங்கியுடன் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும், அனைத்து சேமிப்புப் படிவங்களிலும் (Deposit Slips), பணம் மீளப் பெறும் படிவங்களிலும் அந்த இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். வாடிக்கையாளருக்கு அறிவித்தல் கொடுத்து விட்டு மேற்படி இலக்கத்தை மாற்றுவதற்குக் வங்கி க்கு உரிமை உண்டு.

முதிர்வு இலக்குப் பெறுமதி மற்றும் முதிர்வுத் திகதி

3. ஒரு நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கை (NPIP) குறைந்தபட்ச முதிர்வு இலக்குப் பெறுமதி ரூ. 100,000 உடனும் அதிகபட்ச முதிர்வு இலக்குப் பெறுமதி ரூ. 10,000,000 உடனும் திறக்கலாம்.

   "**முதிர்வுத் திகதி**" என்பது பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வாடிக்கையாளருக்கு முதிர்வு இலக்குப் பெறுமதி கிடைக்கின்ற திகதியாகும்.

   "**முதிர்வு இலக்குப் பெறுமதி**" என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கு (NPIP) முதிர்வடைகின்ற திகதியில் பெற்றுக் கொள்வதற்கு வாடிக்கையாளர் வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள தொகையாகும்.

4. குறைந்தபட்சம் இரண்டு (2) வருட மற்றும் அதிகபட்சம் ஐந்து (5) வருட காலஎல்லையில் அல்லது வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படுகின்ற மற்றும் அங்கீகரிக்கப்படுகின்ற வேறொரு காலஎல்லையில் வாடிக்கையாளருக்குக் கிடைக்கின்ற வகையில் தேர்ந்தெடுக்கப்படலாம்.

5. மேலே உள்ள 4 ஆம் இலக்க பிரிவுக்கு உட்பட்டு, நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைத் (NPIP) திறக்கும் போது, கணக்கு திறக்கும் விண்ணப்பப் படிவத்தில், பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்ற முதிர்வு இலக்குப் பெறுமதியைத் தேர்ந்தெடுத்து அதில் குறிப்பிட வேண்டும். அதன் படி, இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதிர்வுத் திகதியில் முதிர்வு இலக்குப் பெறுமதியைப் பெற்றுக் கொள்வதற்குத் தகைமை பெறுவதற்காக NPIP கணக்கில் வைப்புச் செய்ய வேண்டிய மாதாந்த தவணைப் பணத்தையும் அது செலுத்தப்பட வேண்டிய திகதியையும் வங்கி கணக்கிட்டு வாடிக்கையாளருக்கு அறிவிக்கும்.

<u>தவணைப் பணம்</u>

6. அ) ஆரம்ப வைப்புத்தொகை, இலக்கு முதிர்வுப் பெறுமதி, முதலீட்டு காலஎல்லை மற்றும் ஒப்பந்த வட்டி விகிதம் ஆகியவற்றை கருத்தில் எடுத்துக் கொண்டு வங்கியால் மாதாந்த தவணைத் தொகை கணக்கிடப்படும்.

   ஆ) உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட மாதாந்த தவணைத் தொகையை NPIP கணக்கில் வைப்புச் செய்ய வாடிக்கையாளர் ஒப்புக் கொள்கிறார். வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதிர்வு இலக்குப் பெறுமதியைப் பெறத் தகுதி பெறுவதற்கு, மாதாந்த தவணைப் பணத்தை முதிர்வுத் திகதி வரை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் முழுமையாகச் செலுத்த வேண்டும். வாடிக்கையாளர் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ள படி ஒவ்வொரு மாதமும் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் மாதாந்த தவணைப் பணத்தை முழுமையாகச் செலுத்தத் தவறினால், முதிர்வுத் திகதியில் முதிர்வு இலக்குப் பெறுமதி வாடிக்கையாளருக்குக் கிடைக்காது.

7. 2020 அக்டோபர் 15 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில், NPIP கணக்கைத் தொடங்கத் தகுதிபெறுவதற்காக, வாடிக்கையாளர் நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) மாதாந்த தவணைகளை வைப்புச் செய்யும் வகையில் வங்கியில் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு சேமிப்பு/நடைமுறைக் கணக்கின் கீழ் ஒரு நிலையான கட்டளையை வழங்க வேண்டும்.

   எவ்வாறிருப்பினும், வங்கியானது பணம் மற்றும் வாடிக்கையாளரின் பெயரில் வரையப்பட்ட காசோலைகளை நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) செய்யப்படும் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளலாம். ஏனைய வங்கிகளால் வழங்கப்படும் காசோலைகளைப் பொறுத்தவரை, அந்தந்த காசோலைகள் பணமாக மாற்றப்பட்டு, தவணைத் தொகையானது குறிப்பிட்ட திகதிக்குள் NPIP கணக்கில் வரவு வைக்கப்பட்டால் மட்டுமே நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

8. கீழே உள்ள 28 ஆம் இலக்க பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முறையைத் தவிர, முதிர்வுத் திகதிக்கு முன்னர் நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கிலிருந்து (NPIP) பணத்தை எடுக்க வாடிக்கையாளர் அனுமதிக்கப்பட மாட்டார்.

வட்டி மற்றும் முதிர்வுக் கொடுப்பனவுகள்

9. நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைத் (NPIP) திறக்கும் போது வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் (NPIP) நாளாந்த நிலுவைக்கான வட்டி கணக்கிடப்படும் என்பதுடன், முதிர்வு திகதி வரை மாதந்தோறும் அது நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) வரவு வைக்கப்படும். சட்டம் அல்லது ஒழுங்கு விதிமுறைகள் அல்லது இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி தேவைப்பட்டால் வட்டி விகிதங்களை மாற்றுவதற்கான அல்லது திருத்துவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

10. வாடிக்கையாளர் இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க செயலாற்றி இருந்தால், சட்டத்தினால் கோரப்பட்டுள்ளவாறு முதிர்வுத் திகதியில் அல்லது முதலீடு செய்கின்ற காலஎல்லையில் செலுத்த வேண்டியுள்ள அரசாங்க வரிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட வரிகள் கழிக்கப்பட்டு முதிர்வு திகதியில் வங்கியால் முதிர்வு இலக்குப் பெறுமதி செலுத்தப்படும்.

11. முதிர்வுத் திகதிக்கு முன்னர் முதிர்வு இலக்குப் பெறுமதியை அடையும் நோக்கத்துடன் வாடிக்கையாளர் நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) ஒரே தடவையில் மொத்தத் தொகையையும் வைப்புச் செய்தால், இலக்கு முதிர்வுப் பெறுமதி முழுமையடைந்த நாளிலிருந்து நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைப் (NPIP) பொறுத்த வரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி விகிதத்தை வங்கி இடைநிறுத்திவிட்டு வங்கியின் நியம சேமிப்புக் கணக்கிற்கான விகிதத்தில் அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வேறு ஒரு விகிதத்தில் முதிர்ச்சியடையும் திகதி வரை வட்டியைக் கணக்கிட்டு அது குறித்து வாடிக்கையாளருக்கு அறிவிக்கும்.

12. வாடிக்கையாளர் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்த தவணைத் தொகைக்கு அதிகமான ஒரு தொகையை அல்லது அந்தத் தவணைத் தொகையின் மடங்குகளாக மேலதிகமாக ஒரு தொகையை எந்த நேரத்திலும் வைப்புச் செய்து, முதிர்வுத் திகதிக்கு முன்னர் முதிர்வு இலக்குப் பெறுமதியை அடைந்தால், வங்கி முதிர்வுப் பெறுமதியை எட்டிய திகதியிலிருந்து நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைப் (NPIP) பொறுத்த வரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி விகிதத்தை வங்கி இடைநிறுத்தி விட்டு வங்கியின் நியம சேமிப்புக் கணக்கிற்கான விகிதத்தில் அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வேறு ஒரு விகிதத்தில் முதிர்ச்சியடையும் திகதி வரை வங்கி வட்டியைக் கணக்கிட்டு அது குறித்து வாடிக்கையாளருக்கு அறிவிக்கும்.

13. வாடிக்கையாளர் முதிர்வு இலக்குப் பெறுமதியை எட்டியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல், நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் (NPIP) வட்டி விகிதமானது முதிர்வு திகதியில் நியம சேமிப்புக் கணக்கின் விகிதத்திற்கு அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படும் வேறொரு விகிதத்திற்கு மாற்றப்படும்.

14. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளவாறு கணக்கு ஆரம்பிக்கும் படிவங்களில் வாடிக்கையாளரின் வரி நிலை மற்றும் வசிக்கும் முகவரி பற்றிய சட்டப்பூர்வ ஒரு பிரகடனத்தை பூர்த்தி செய்ய வேண்டும். நிறுத்தி வைக்கப்படும் வரி (withholding tax) அல்லது வட்டிக் கொடுப்பனவு மீது செலுத்த வேண்டிய ஏனைய வரிகளானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அவ்வாறான ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் காலத்திற்காக செலுத்த வேண்டிய வட்டியில் இருந்து கழித்துக் கொள்வதற்கு வங்கியால் நடவடிக்கை எடுக்கப்படும். அக் குறித்த அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் பின்னொரு சந்தர்ப்பத்தில் செலுத்தப்படாத வரியை வங்கியிடம் கோரும் பட்சத்தில், அதை அறவிடும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

காப்புறுதி

15. கணக்கைத் திறக்கும் போது வாடிக்கையாளரின் வயது அறுபது (60) வருடங்களை மிகைக்காமல் இருக்கும் பட்சத்தில் மற்றும் காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதிக்கான வாடிக்கையாளரின் பிரேரணைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருந்தால், நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைத் (NPIP) தொடங்கிய 2 மாதங்களுக்குள், வங்கி வாடிக்கையாளருக்காக ஆயுள் காப்புறுதிக் காப்பீடு ஒன்றை ஏற்பாடு செய்யும்.

16. முதிர்வு இலக்குப் பெறுமதியைப் பொருட்படுத்தாமல், காப்பீட்டுத் தொகை அதிக பட்சமாக ரூ. 2,000,000/- க்கு வரையறுக்கப்படும். அதாவது, வாடிக்கையாளர் முதிர்வுத் திகதிக்கு முன் இறந்து விட்டால், கிடைக்கின்ற காப்புறுதித் தொகையானது, வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதிர்வு இலக்குப் பெறுமதியை எட்டுவதற்கு (அதேபோன்று வாடிக்கையாளர் மரணிக்கும் போது அந்த இலக்கு அடையப்படாமலும் இருந்தால் அதனை அடைந்து கொள்ள) முடிகின்ற வகையிலான ஒரு தொகையாக இருக்குமாயினும் அத் தொகை ரூ. 2,000,000/-ஐ மிகைக்காமல் இருக்க வேண்டும். (உதா:- முதிர்வு இலக்குப் பெறுமதி ரூ. 2,000,000/-க்கு மேல் இருக்கும் ஒரு வாடிக்கையாளரின் மரணத்தின் போது மற்றும் வாடிக்கையாளரின் மரணத்தின் போது நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் (NPIP) அடிப்படை வைப்புத் தொகை மற்றும் திரட்டப்பட்ட வட்டி ரூ. 2,500,000/- ஆக இருக்குமானால், காப்புறுதி அனுகூலம் செலுத்தப்பட மாட்டாது).

    உதா:- (அ) வாடிக்கையாளரின் மரணத்தின் போது நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கு (NPIP) நிலுவை (நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் (NPIP) அடிப்படை வைப்பு மற்றும் திரட்டப்பட்ட வட்டி உட்பட) ரூ. 350,000/- ஆகவும் அவரது இலக்கு முதிர்வுப் பெறுமதி ரூ. 1,000,000.00 ஆகவும் இருந்தால், செலுத்தப்படும் காப்புறுதி அனுகூலம் ரூ. 650,000.00 ஆகும். (அதாவது ரூ. 1,000,000.00 – ரூ. 350,000.00)

    உதா:- (ஆ) வாடிக்கையாளரின் மரணத்தின் போது நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கு (NPIP) நிலுவை ரூ. 350,000/- ஆகவும் அவரது இலக்கு முதிர்வுப் பெறுமதி ரூ. 3,000,000.00 ஆகவும் இருந்தால், செலுத்தப்படும் காப்புறுதி அனுகூலம் ரூ. 1,650,000.00 ஆகும். (அதாவது ரூ. 2,000,000.00 – ரூ. 350,000.00)

    உதா:- (இ) வாடிக்கையாளரின் மரணத்தின் போது நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கு (NPIP) நிலுவை ரூ. 350,000.00 ஆகவும் அவரது இலக்கு முதிர்வுப் பெறுமதி ரூ. 2,500,000.00 ஆகவும் இருந்தால், காப்புறுதி அனுகூலம் எதுவும் செலுத்தப்பட மாட்டாது.

17. வாடிக்கையாளரின் மரணம் வரை இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வாடிக்கையாளர் முழுமையாக இணங்கி நடந்து கொண்டிந்தால் மட்டுமே காப்புறுதிக் காப்பீட்டின் கீழ் அனுகூலம் கிடைக்கும்.

18. வாடிக்கையாளரால் 2 தவணைப் பணங்கள் செலுத்தப் பட்டிருக்காவிட்டால், காப்புறுதிக் காப்பீடு காலாவதியாகி விடும். அத்தகைய சூழ்நிலையில், வாடிக்கையாளரின் நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கிலிருந்து (NPIP) அறவிட்டுக் கொள்வது உட்பட, அத்தகைய தவணைப் பணம் செலுத்தப்படாத ஆண்டில் வாடிக்கையாளரின் சார்பாக வங்கி செலுத்தியுள்ள காப்புறுதிக் கட்டுப்பணத்தை(களை) வாடிக்கையாளரிடமிருந்து அறவிட்டுக் கொள்ள வங்கிக்கு உரிமை உண்டு.

19. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, மாதாந்த தவணைகளை சரியான நேரத்தில் செலுத்துவதை உறுதி செய்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். காப்பீட்டின் கீழ் செலுத்தப்படுகின்ற அனுகூலங்கள் இரத்துச் செய்யப்படுகின்ற அல்லது இரத்துச் செய்யப்படுவதை பெறுபேறாகக் கொண்டு வருகின்ற தவணைப் பணம் நிலுவையாகும் போது அல்லது தாமதமாகும் போது அது பற்றி வாடிக்கையாளருக்குத் தெரிவிப்பது வங்கியின் பொறுப்பாகாது. எவ்வாறாயினும், வங்கி தனது விருப்பத்தின் பேரில், அத்தகைய செயலிழப்பு இடம்பெறுவதற்கு முன்னர் அல்லது பின்னர் ஓர் அறிவிப்பை வழங்கலாம்.

20. காப்புறுதிக் காப்பீடானது சம்பந்தப்பட்ட காப்புறுதிக் கம்பனியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும் என்பதுடன், அவசியப்பட்டால் வாடிக்கையாளர் மருத்துவப் பரிசோதனைகள் உட்பட, காப்புறுதிக் கம்பனியின் அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இணங்க வேண்டும். வாடிக்கையாளருக்கு காப்பீடு வழங்க காப்புறுதிக் கம்பனிக்கு முடியாமல் போனால் அல்லது காப்பீடு செய்ய மருத்தால் வங்கி அது தொடர்பில் வாடிக்கையாளருக்கு பொறுப்புக் கூற கடமைப்பட்டில்லை. வாடிக்கையாளர் வங்கிக்கு ஒரு கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் காப்புறுதிக் கம்பனியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஒரு பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

21. காப்புறுதிக் கம்பனியால் வாடிக்கையாளர் உட்பட வேண்டும் எனக் கோரப்படும் மருத்துவப் பரிசோதனை/மதிப்பீடுக்கான செலவை வாடிக்கையாளரே ஏற்க வேண்டும்.

22. காப்புறுதிக் காப்பீட்டின் முதிர்வுத் திகதி அல்லது வாடிக்கையாளர் 60 வயதை அடையும் திகதி ஆகியவற்றில் முதலாவதாக வரும் திகதியில் காப்பீடு காலாவதியாகும் என்பதுடன் அதன் பிறகு எந்த அனுகூலமும் செலுத்தப்பட மாட்டாது.

<u>முதிர்வுத் திகதிக்கு முன் வாடிக்கையாளர் மரணித்தல்</u>

23. முதிர்வுத் திகதிக்கு முன் வாடிக்கையாளர் இறந்து விட்டால், வங்கி நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கை (NPIP) மூடிவிடும் என்பதுடன், கீழே உள்ள பிரிவு 24 இன் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு உரிய சட்டத்தின் படி, நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் (NPIP) நிலுவையானது வாடிக்கையாளரின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு செலுத்தப்படும்.

24. வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைத் (NPIP) திறக்கும் நேரத்தில் அல்லது அதற்குப் பிறகு எந்த நேரத்திலும் ஒரு நியமத்தர் படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம், முதிர்வு திகதிக்கு முன் வாடிக்கையாளர் மரணித்தால்இறுதி தீர்வுத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு வாடிக்கையாளர் ஒரு பயனாளி அல்லது பயனாளிகளைப் பரிந்துரைக்க முடியும்.

25. காப்புறுதி உரிமைக் கோரிக்கையைச் செலுத்த, வாடிக்கையாளரின் வாரிசுகள், உரிமைத் தத்துவக்காரர்கள் அல்லது நிறைவேற்றுனர்கள் வாடிக்கையாளர் இறந்த நாளிலிருந்து 2 மாதங்களுக்குள் வங்கிக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும். மேற்படி காலத்திற்குள் அறிவிக்கத் தவறினால், காப்பீட்டு உரிமைக் கோரிக்கைகள் செலுத்தப்படாமல் போவதற்கு இடமுண்டு.

கணக்கை மூடுதல் / முடித்துக் கொள்ளுதல்

26. **தவணைப் பணம் செலுத்தத் தவறுதல்:** வாடிக்கையாளர் தொடர்ந்து 2 மாதாந்த தவணைகளை உரிய திகதியில் செலுத்தத் தவறினால், பின்வருமாறு செயலாற்றுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது:

    அ. நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கை (NPIP) மூடிவிட்டு முதலீடு செய்யப்பட்ட அடிப்படைத் தொகையை திரண்டுள்ள வட்டியுடன் சேர்த்து வாடிக்கையாளருக்கு செலுத்துதல்.

        அல்லது

    ஆ. முதிர்வுத் திகதி வரை நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கை (NPIP) தொடருதல்.

27. மேலே உள்ள பிரிவு 26 இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிகழ்வுகளிலும், கடைசியாக தவணைப் பணம் செலுத்தாத திகதியிலிருந்து நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கை (NPIP) மூடும் திகதி வரை அல்லது (ஏற்புடையதாகும் வகையில்) முதிர்வுத் திகதி வரையிலான காலத்திற்கான வட்டி, வங்கியின் நியம சேமிப்புக் கணக்கு வீதம் அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வேறு வீதங்களுக்கு இணங்க கணிக்கப்படும். வங்கியால் பராமரிக்கப்படும் அதே நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) வாடிக்கையாளர் அனைத்து நிலுவைத் தவணைகளையும் பின்னர் வைப்புச் செய்தாலும், வட்டி கணக்கீடு மேலே குறிப்பிட்டது போல் இருக்கும்.

28. **முதிர்வைடய முன்னர் மூடுதல்:** விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மற்றும் வங்கியின் முழுமையான விருப்புரிமையின் பேரில் அன்றி, வாடிக்கையாளர் நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கை (NPIP) முதிர்வுத் திகதிக்கு முன்னர் மூடுவதற்கு மற்றும்/அல்லது அதில் உள்ள நிலுவையைத் திரும்பப் பெற அனுமதிக்கப்பட மாட்டார். முதிர்வுத் திகதிக்கு முன்னர், NPIP கணக்கை மூடுவதற்கு வங்கி வாடிக்கையாளரை அனுமதிக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தில், கணக்கைத் திறந்த திகதியிலிருந்து மூடும் திகதி வரை, வங்கி அதன் நியம சேமிப்புக் கணக்கு விகிதத்தை அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படும் வேறு விகிதங்களைப் பயன்படுத்தும் என்பதுடன். வாடிக்கையாளர் முதலீடு செய்துள்ள தொகைக்காக வங்கியினால் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள மேலதிக வட்டியை வங்கி வசூலிக்கும்.

29. **வங்கியால் மூடப்படுதல்:** வங்கியின் பதிவேடுகளில் கடைசியாக குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளரின் அஞ்சல் முகவரிக்கு அல்லது வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள வாடிக்கையாளரின் மின்னஞ்சல் முகவரிக்கு 14 நாட்கள் எழுத்துமூல அறிவிப்பை வழங்குவதன் மூலம் எந்த நேரத்திலும் NPIP கணக்கை மூடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

30. மேலே உள்ள பிரிவு 26 அல்லது 28 இல் பட்டியலிடப்பட்டுள்ள சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், NPIP கணக்கை வங்கி அல்லது வாடிக்கையாளர் மூடினால், வங்கி அதன் விருப்பப் படி, காப்புறுதிச் செலவுகள் மற்றும்/அல்லது NPIP கணக்கிற்கு பொருந்தக் கூடிய அனுகூலங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக மேற்கொண்டிருக்கக்கூடிய ஏனைய செலவுகளை வங்கி அறவிட்டுக் கொள்ளும்.

31. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் NPIP கணக்கை மூடும் போது, வாடிக்கையாளருக்கு பணம் செலுத்தும் முன், வங்கி

சம்பந்தப்பட்ட அரசாங்க வரிகள் மற்றும் நியதிச் சட்ட வரிகள் மற்றும் கணக்கை மூடுவதற்கான கட்டணம் (ஏற்புடையதாகுமிடத்து) ஆகியவற்றைக் கழித்துக் கொள்ளும்.

32. நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கை (NPIP) மூடுவதன் மூலம், பிரிவு 41 இன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள வங்கியின் உரிமைகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்பதுடன், அதன்படி, பிரிவு 41 இன் கீழ் அதன் உரிமைகள் செயற்படுத்தப்படும் வரை நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) உள்ள நிதியை செலுத்துவதற்கு வங்கிக்குக் எந்தப் பொறுப்பும் கிடையாது.

பொதுவான நிபந்தனைகள்

33. வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் (NPIP) விவரங்கள் அடங்கிய முதலீடு பற்றி அறிவிப்பு வாடிக்கையாளருக்கு நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கைத் (NPIP) திறக்கும் போது வழங்கப்படும். வாடிக்கையாளருக்கு கணக்குப் புத்தகம் வழங்கப்பட மாட்டாது.

34. வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவாறு அச்சு அல்லது மின்னணு முறையில் கணக்கு அறிக்கையை வாடிக்கையாளருக்கு வங்கி அரையாண்டுக்கு ஒருமுறை அனுப்பும். எவ்வாறாயினும், வாடிக்கையாளருக்கு அறிக்கைகள் வழங்கப்படுகின்ற இடைவெளிகளை அதன் விருப்பப்படி மாற்றுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

35. கணக்குகள் தொடர்பான கணக்குக் கூற்றுக்கள் மற்றும்/அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகளின் பிரதிகள் 6 ஆண்டுகள் வரை (அல்லது வங்கி தீர்மானிக்கின்ற வேறொரு காலவல்லை வரை) மட்டுமே வங்கியால் பாதுகாத்து வைக்கப்படும். அத்தகைய பதிவுகள் அனைத்தையும் 6 ஆண்டுகளுக்குப் பிறகு அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், 6 ஆண்டுகள் காலாவதியான பிறகு கணக்குக் கூற்றுகளின் பிரதிகளை அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகளின் பிரதிகளை வழங்குவதற்கான எந்தப் பொறுப்பையும் வங்கி ஏற்காது.

36. வாடிக்கையாளருக்கு கணக்கு அறிக்கை கிடைக்காவிட்டாலோ அல்லது மின்னணு முறையில் வங்கியால் வழங்கப்படாவிட்டாலோ, அறிக்கை கிடைத்திருக்க வேண்டிய திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் (அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 20 மற்றும் டிசம்பர் 31 ஆம் திகதி) வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். வங்கியிலிருந்து பெறப்பட்ட ஒவ்வொரு கணக்கு அறிக்கையையும் சரிபார்த்து, தகவல் சரியாக உள்ளிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வாடிக்கையாளர் ஒப்புக் கொள்கிறார். ஏதேனும் பிழை இருந்தால், அறிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

37. வாடிக்கையாளர் தனது அறிக்கையின் பிரதிகளைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். வங்கியிடமிருந்து அறிக்கைகளின் பிரதிகள் கோரப்பட்டால், வங்கியின் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு ஏற்ப இந்த சேவையை வழங்குவதற்கான கட்டணத்தை அறவிட வங்கிக்கு உரிமை உள்ளது.

38. வங்கி அதன் விருப்பப் படி அனுப்பினாலே தவிர, நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) வைப்புச் செய்யப்பட்ட பணம் அல்லது காசோலைகள் கிடைத்துள்ளமை பற்றிய பிரத்தியேக அறிவிப்பை தபாலில் அனுப்பாது.

39. வாடிக்கையாளரின் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், வாடிக்கையாளர் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

40. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கின் (NPIP) கீழ் வாடிக்கையாளரின் உரிமைகள் அல்லது கடமைகள் எதையும் வாடிக்கையாளர் உரிமைசாட்டவோ மாற்றவோ கூடாது என்பதுடன், அத்தகைய பரிவர்த்தனையிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் எந்த இழப்புக்கும் வங்கி கட்டுப்படாது அல்லது பொறுப்பேற்காது.

41. இங்கு அடங்கியுள்ள எதற்கும் முரணாக இருப்பினும் அது பற்றிக் கருத்தில் கொள்ளாமல், வாடிக்கையாளரின் நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கு (NPIP) அல்லது வாடிக்கையாளரின் வங்கிக்கான எந்தவொரு பொறுப்பும் வாடிக்கையாளரின் வேறு ஏதேனும் கணக்குடன் ஒருங்கிணைக்கப்பட்டோ அல்லது ஒன்றாக சேர்க்கப்பட்டோ நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கில் (NPIP) வரவு வைக்கப்பட்டுள்ள எந்தத் தொகையையும் வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ள, வேறு ஏதேனும் தொகையை வேறு ஏதேனும் ஒரு கணக்கிற்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு வழியில், அத்தகைய பொறுப்புக்கள் உண்மையானதாகவோ அல்லது நிச்சயமற்றதாகவோ, முதன்மையானதாகவோ அல்லது பிணையாகவோ மற்றும் பலதோ அல்லது கூட்டாகவோ அல்லது ஒன்றிணைக்கப்பட்டதாகவோ இருந்தாலும் கூட, சாட்டுவதற்கு அல்லது பரிமாற்றம் செய்வதற்கு நான் இதன் மூலம் ஒப்புதல் அளித்து அதற்காக வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

42. வாடிக்கையாளருக்கு அறிவிப்பதன் மூலம் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்ற, திருத்த அல்லது சேர்க்க வங்கிக்கு உரிமை உள்ளது.

43. வேறுவிதமாக ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தாலே தவிர, வாடிக்கையாளர்களுக்கு எழுத்துப் பூர்வமாக, தபால் மூலமாக மற்றும்/அல்லது வங்கியின் மின்னணுத் தொடர்பு வழிகள் மற்றும்/அல்லது வங்கி பொருத்தமானதாகக் கருதும் பிற பொருத்தமான முறையில் அறிவிப்புகள் அனுப்பப்படும்.

ஒரு அறிவிப்பை வழங்குதல்/அனுப்புதல் தோல்வியடைந்துள்ளது என்ற அறிவிப்பு வங்கிக்கு கிடைக்காத பட்சத்தில் அனுப்பப்பட்டுள்ள ஓர் அறிவிப்பானது,

அது தபால் மூலம் அனுப்பப்பட்டிருந்தால், அவ்வாறு தபாலில் அனுப்பிய 2 நாட்களுக்குப் பிறகு,

மற்றும்:

மின்னஞ்சல் அல்லது பிற மின்னணு வழிகளில் அனுப்பப்பட்டிருந்தால், அவ்வாறு அனுப்பப்பட்ட 24 மணிநேரத்திற்குப் பிறகு அது நடைமுறைக்கு வரும்.

அனுப்புதல் வெற்றிகரமானதாக இல்லாவிட்டால் வங்கி அதை வேறுவிதமாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

தினசரி செய்திப் பத்திரிகைகளில், வங்கிக் கிளைகளில், தானியங்கி டெல்லர் இயந்திரங்களில் அல்லது வங்கியின் இணையத் தளத்தில் வெளியிடப்படும் பொது அறிவிப்புகள் வடிவில் அறிவிப்புக்கள் மேற்கொள்ளப்படலாம். இது போன்ற சந்தர்ப்பங்களில்,

அவை வெளியிடப்படும் அல்லது பிரசுரிக்கப்படும் நேரம் தொடக்கம் அல்லது அல்லது வங்கி குறிப்பிடும் வேறு நேரம் தொடக்கம் அமுலுக்கு வரும்.

மேற்கூறியவாறு அனுப்பப்பட்ட ஓர் அறிவிப்பு போதியளவு மற்றும் முறையாக அனுப்பப்பட்டுள்ள ஓர் அறிவிப்பாகக் கருதப்படும் என்பதுடன், வாடிக்கையாளர் அதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

ஒரு வாடிக்கையாளர் தன்னுடன் தொடர்பு கொள்ளக்கூடிய புதுப்பிக்கப்பட்ட தொடர்பு விவரங்களை வங்கிக்கு வழங்கவில்லை என்றால், அறிவிப்புகள் கிடைக்காமையினால் ஏற்படும் இழப்பை வாடிக்கையாளரே பொறுப்பேற்க வேண்டும். கடைசியாக வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ள முகவரி / தொடர்பு இலக்கங்கள் மூலம் வாடிக்கையாளரைத் தொடர்பு கொள்ள முடியாது என்று வங்கி நியாயமான முறையில் நம்பினால், அறிவிப்புகளை அனுப்புவதை வங்கி இடைநிறுத்தலாம் அல்லது கைவிட்டு விடலாம். அத்தகைய சூழ்நிலையில், நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்கு (NPIP) தொடர்பான அனைத்து அறிவிப்புத் தேவைகளையும் வாடிக்கையாளர் தள்ளுபடி செய்துள்ளதாகக் கருதப்படும்.

44. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, நேஷன்ஸ் தனிப்பட்ட முதலீட்டுத் திட்டக் கணக்குகள் (NPIP) வங்கியின் பொதுவான வியாபார நிபந்தனைகளில் அடங்கியுள்ள நியதி, நிபந்தனைகளுக்கும் உட்படும்.

45. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களால் நிர்வகிக்கப்படும்.

இங்கு அடங்கியுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் நான் வாசித்துப் புரிந்து கொண்டுள்ளதுடன் அவற்றிற்கு கட்டுப்படுவதற்கு இத்தால் ஒப்புக் கொள்கிறேன்.

.....

வாடிக்கையாளரின் கையொப்பம்

திகதி: